# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

நான்கு வேதங்களின் ஞானசாரமாக வியாஸர் ப்ரம்மசூத்திரம் அருளினார். இது பகவானைப் பற்றிய ஆய்வு நூல். அதன் முதல் சூத்திரம், "அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா" என்று உள்ளது. "இனி பகவானைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவோம்" என்பது இதன் பொருள். இன்று உலகத்தில் தாவர ஆராய்ச்சி, விலங்கியல் ஆராய்ச்சி, மண்வள ஆராய்ச்சி, என்று எத்தனையோ ஆய்வுகள் நிகழ்கின்றன. ஆனால் பகவானைப் பற்றிய ஆராய்ச்சி இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலாவது நடந்திருக்கிறதா? அல்லது நடந்து கொண்டிருக்கிறதா?

உலகின் அனைத்து மதங்களிலும் அவரவர் தெய்வங்களுடைய ஆணைகள் தான் மதப்புத்தகங்களாக திகழ்கின்றனவே தவிர இறைவன் எப்படிப்பட்டவன் அவன் உருவம் என்ன, குணம் என்ன என்பதைப் பற்றி அறிந்து கொள்ள எந்த மதத்தினரும் ஆர்வம் காட்டவும் இல்லை; இந்த கேள்விகளுக்கு அவர்களுடைய மத புத்தகங்களில் விடையும் இல்லை. ஆனால் நம் பாரத நாட்டு ஞானிகள் பகவானைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வியத்தகு முறையில் வெற்றியும் கண்டார்கள். அதைப் பிறர் அறியும்படி எழுதியும் வைத்தார்கள். மேலும் எந்தப் பாதையில் எப்படி நடந்தால் தம்மைப் போல் மற்றவர்களும் பகவானை அறியலாம் என்ற மார்க்கத்தையும் காட்டி வைத்தார்கள். சவால் விட்டுச் சொல்லலாம், இது நம் நாட்டுக்கே உரிய தனிச்சிறப்பு! அந்த ஒரு பகவானை அறியவும் அடையவும் பக்தியோகம், கர்மயோகம் நியாஸ யோகம் என்ற பலப்பல வழிகளையும் சொல்லி வைத்தார்கள்.

ஆனால் நம்நாட்டிலே இன்று நடப்பது என்ன? பகவானைப் பற்றிய ஆராய்ச்சியா? இல்லை! பண்டைய சாத்திரங்களைக் குறை கூறி, அரும்பாடுபட்டு நம் முன்னோர்கள் சம்பாதித்து வைத்த சமூக வாழ்க்கை முறையைச் சிதைத்து, மேல் நாட்டு மக்களை விட அதிகமாகக் கெட்டுப் போவது எப்படி என்ற ஆராய்ச்சிதான் நடந்து கொண்டிருக்கிறது! பொழுது போக்கு அம்சங்களே பிரதானமாக இன்றைய சமூக வாழ்வில் தலைவிரித்தாடுகின்றன. இந்தக் கூத்தும் கும்மாளமும் யாரைப் பாதிக்கும்? முனிவர்களையா நம்மையா? ஞானம், முக்தி, தெய்வ சம்பத்து முதலியவற்றுக்கு அதிபதியாக நவ கிரஹங்களில் தேவகுரு என்ற வியாழனைச் சொன்னார்கள். ஆனால் பாட்டு, நாட்டியம், நடிப்பு முதலிய நளினக் கலைகளுக்கு அதிபதியாக அசுர குரு சுக்கிரனைச் சொல்லுகிறது நம் ஜோதிட சாஸ்திரம். சுக்கிரன் வாமனப் பெருமாள் தானம் பெற முடியாதபடி தடுத்தவன். அசுரர்களின் ஆசைகள் நிறைவேற வழி சொல்பவன். அவன் அறிவுரை கேட்ட அரக்கர்கள் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. தசரத ராமனும், தன் தம்பி பரதனுக்கு அந்தரங்கமாக அறிவுரை கூறும்போது பொழுதுபோக்குக் கலைகளில் அதிகமாக ஈடுபடாதே என்று வலியுறுத்துகிறான். அவை ஒரு மனிதனைப் பாழாக்கிவிடும் என்கிறான். ஆனால் இன்று நாம் அவன் தடுத்த பாதையில்தான் வீறு நடைபோட்டுப் போய் கொண்டிருக்கிறோம்.

தொலைக்காட்சிகளில் காட்டப்படும் நெடுந்தொடர்கள், பத்திரிகைகளில் வெளியாகும்

கதைகள், சினிமாக்களில் உணர்த்தப்படும் சமூக நீதிகள் இவை எல்லாமே பெரும்பாலும் தரும நீதிக்குப் புறம்பாகவே இருக்கின்றன. தன் மகனோ மகளோ குடும்ப கௌரவத்துக்குப் புறம்பாக காதல் லீலைகளில் ஈடுபட்டு முறை தவறிய திருமணங்களில் மாட்டிக் கொள்ளும் போது மனம் பதறும் பெற்றோர்கள் அந்த நிலைமைக்குக் காரணம் தாங்கள்தான் என்று உணருவதில்லை. அன்றாடம் பிள்ளைக்களுக்கு ஆன்மீகக் கல்வியும் ஒழுக்கமும் மனதில் பதியும் படி பிள்ளைகளை வளர்த்த நம் முன்னோர்களின் வாழ்க்கை முறை காற்றிலே பறந்துவிட்டது. ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகினால் அது ஆபத்தில்தான் போய் முடியும் என்ற சரித்திர உண்மையை நாம் சாக்கடையில் போட்டு விட்டோம். ஆண்களும் பெண்களும் சேர்ந்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் கல்வி முறையில் இன்று என்னென்ன தீய விளைவுகள் ஏற்பட்டுள்ளன? இவற்றையெல்லாம் அனுமதித்தது யார்? நடக்க வைத்தது யார்? கலிபகவானா? அல்லது கலியின் பெயரை சொல்லிக் கொண்டு கண்மூடித்தனமாக வாழும் பொறுப்பில்லாத பெற்றோரா?

பள்ளிப் பிள்ளைகளை ஆசிரியர்கள் அடிக்கக் கூடாது என்று அரசு சட்டம் போட்டிருக்கிறது. பேஷ்! சமூகத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அற்புதம்! இனி மாணவர்கள் ஆசிரியர்களை அடித்தால் குற்றமில்லை என்ற சட்டம் தான் பாக்கி. காலம் காலமாக கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட மாணவர் சமுதாயம் வளர்ந்து வருங்கால பெரியோர் சமுதாயமாக உருவாகி மாணக்கங்களாக திகழ்ந்த காலத்தை இனி நாம் மறந்து விட வேண்டியது தான்.

குடுமி முடித்தவன், கோவணவேஷ்டி கட்டியவன், காதிலே பூ வைத்தவன் என்று எந்த முன்னோர்களை நாம் இகழ்கிறோமோ அவர்கள் அமைத்துச் சென்ற சமூக கட்டமைப்பில் குறைகள் அதிகம் இருந்தனவா? நிறைகள் அதிகம் இருந்தனவா? சில தவறுகள் இருக்கலாம். ஆனால் விழுக்காட்டு முறையில் பார்த்தால் 80 சதவீதமாவது நன்மைகள் நிறைந்த சமூக அமைப்பு தான் அறிவார்ந்த சமூகமாக இருக்க முடியும்.

இன்றையச் சமுதாயத்தில் நாம் காணுமளவு விவாகரத்துக்கள், தகப்பன் பேர் தெரியாத பிரசவங்கள், நோய்களின் ஆதிக்கம், பெரியவர்களுக்கு அடங்காமை, மன அமைதியின்மை, வாழ்வைக் கெடுக்கும் இயற்கையின் சீற்றங்கள் அந்தக் காலத்தில் இல்லை. ஒரு 100 ஆண்டுகளுக்கு முன்பு கூட கூட்டுக் குடும்பங்களும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைகளும், பண்பு கெடாத பரம்பரைகளும் ஆயிரக்கணக்கில் இருந்தன. பழையன கழிதல், என்ற கொள்கை வீட்டில் உள்ள குப்பைகளுக்கும் கிழிந்த துணிகளுக்கும், நெளிந்த பாத்திரங்களுக்கும், பொருந்தலாம். ஆனால் சமூகத்தில் கடைப்பிடிக்கப்படும் நெறிமுறைகளை மாற்றுவதற்கு முன்பு சிறிது நிதானிக்க வேண்டும். கூழாங்கல் என்று நாம் எண்ணி நாம் தூக்கி எரியும் ஒரு பொருள் மாணிக்கக்கல்லாய் இருந்து விட்டால் நஷ்டம் யாருக்கு? எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமக்கு நன்மையே செய்துவந்த பாரம்பரிய பழக்கங்கள் மீது நமக்கு ஏன் தீடீரென்று இந்த வெறுப்பு? புதுமை என்ற பெயரில் கண்போன போக்கில் கால்போகும் மேனாட்டு வாழ்க்கை நமக்கு பூலோக சொர்க்கத்தை படைத்துத் தரப் போகிறது என்று நாம் நினைக்கிறோமா? அந்த வாழ்க்கை முறை அந்த மேல்நாடுகளிலேயே நரகவேதனையை தந்து கொண்டிருக்கிறதென்று அந்த வெள்ளையரே ஒப்புக் கொண்டபோதும் நம், டமாரச் செவிட்டுக் காதுகளில் அது ஏறவில்லையே.

முன்னேறிப் போவது முறை தான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் முன்னேற்றம் நம்மை ஒரு மலையின் உச்சிக்குக் கொண்டு போய் அடுத்த அடி வைத்தால் அங்கிருந்து கீழே அதல பாதாள பள்ளத்தில் விழப் போகிறோம் என்றால் பின்னேறுவதுதான் நல்லது!